# DEPOSITION OF WITNESS
## ( Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR

**Calender :**
**Miscellaneous : CC Case No.349/2020**
**Sessions :**
**Deposition of Witness for : PW1**

| | |
|---|---|
| Name | : திரு.கண்ணப்பன் |
| Father's/Husband Name | : திரு.வைத்தியநாதன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the** 07th **day of May 2024.**

(எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

**குவி.மு.ச.பிரிவு 311ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் பணி செய்யும் நிறுவனத்தில் D.G.M.Hr ஆக பணி செய்து வருகிறேன். நான் சம்பளம் பெற்று தான் அந்த நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தின் உரிமையாளர் யார் என்றால் தனிப்பட்ட நிறுவனத்திற்கு உரிமையாளர் என்று யாரும் கிடையாது. Board of Directors உள்ளார்கள்.

2. எங்கள் நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் எத்தனை உள்ளது என்றால் சூணாம்பேடு மற்றும் கந்தாடு ஆகிய இடங்களில் உள்ளது. இரண்டு இடங்களில் உள்ள நிறுவனத்திற்கும் ஒரே Board of Directors தான் உள்ளார்கள். Board of Directors திட்டங்களை தான் எங்களால் செயல்படுத்த முடியும் என்றால் சரிதான்.

3. Board of Directors செயல்படுத்தும் செயல்கள் மட்டும் தான் எங்களால் செய்யமுடியும் என்றால் சரிதான். இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் நிறுவனத்தின் நட்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தியதால் இவ்வழக்கு தாக்கல் செய்தேன். எந்த வகையில் எப்போது எங்கள் நிறுவனத்தின் நட்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தப்பட்டது என்றால் 10.02.2017 அன்று உமாநாத் என்பவர் ரிப்போர்ட்டர் மற்றும் வீடியோ கிராபர்களுடன் எங்களது நிறுவனத்தின் உள்ளே அத்துமீறி நுழைந்து எங்கள் நிறுவனத்தில் பணி செய்து கொண்டிருந்த ஒப்பந்த தொழிலாளர்களுடன் எங்கள் நிறுவனத்தால் மாசு ஏற்படுத்துவதாக கேள்விகள் எழுப்பி கொண்டு இருந்தார்.

4. இதுபோன்று இந்த ஒரு செயல் மட்டும் தான் எதிரியால் எங்கள் நிறுவனத்தில் நட்பெயர் கெடும் வகையில் செய்யப்பட்டதா என்றால் இல்லை. மேற்சொன்ன செயலுக்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. பத்மா கெமிக்கல் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்றால் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் தான். எங்களது நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றும் அதன் பதிவு எண்ணையும் குறிப்பிட்டு எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் என்று சொல்லியுள்ளேன். ஆனால் பதிவு எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை.

6. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு Board of Directors resolution ஏதேனும் வழங்கியுள்ளார்களா என்றாலும் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் resolution வழங்கப்பட்டுள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

7. அந்த resolution என்றைய தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது சரியாக நினைவில்லை. அந்த resolution ல் யாரெல்லாம் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் நிறுவனத்தின் செக்கரட்டி கையொப்பம் செய்துள்ளார்.

8. மேற்சொன்ன resolution னை தாக்கல் செய்யாமல் இவ்வழக்கை நான் எங்கள் நிறுவனத்திற்காக தாக்கல் செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

உண்மையாகவே அவ்வாறு ஒரு resolution இருந்திருந்தால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அந்த resolution ல் போர்டு ஆப் டைரக்டர்சின் விவரங்கள் மற்றும் நிறுவனத்தின் லைசன்ஸ், முகவரி ஆகியவை குறிப்பிட்டிருக்கும் என்றாலும் அவ்வாறு resolution எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் நான் இந்த வழக்கை தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த இந்த வழக்கு நிறுவனத்தையும் கட்டுப்படுத்தாது, எதிரியையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

9. எதிரிக்கும், எங்கள் நிறுவனத்திற்கும் எந்த வகையில் தொடர்பு உள்ளது என்றால் நிறுவனத்திற்கும், ஏதிரிக்கும் எந்த வகையிலும் தொடர்பு கிடையாது. நிறுவனம் ஆரம்பித்த காலத்திலிருந்து தற்போது வரை எதிரிக்கும், எங்கள் நிறுவனத்திற்கும் நேரிடை தொடர்பு எதுவும் கிடையாது.

10. ம.சா.ஆ.6 காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட புகாரில் எதிரி உமாநாத் ஒரு ஒப்பந்ததாரராக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்தபோது எங்கள் நிறுவனத்திற்கும், ஏதிரிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருக்கவில்லை. ம.சா.ஆ.6 2015ம் ஆண்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது.

11. 2015ம் வருடத்தில் ஒரு கால கட்டத்தில் மட்டும் எதிரி எங்கள் நிறுவனத்தில் ஒப்பந்ததாரராக இருந்தார். மேற்சொன்ன விவரத்தை எனது புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார் தாக்கல் செய்த கால கட்டத்தில் அவர் ஒப்பந்ததாரராக இல்லை அதனால் குறிப்பிடப்படவில்லை.

12. எங்கள் நிறுவனத்தில் சி.சி.டி.வி.கேமரா உள்ளதா என்றால் அலுவலகத்தில் உள்ளது. ஆனால் உப்பளத்தில் இல்லை. எங்கள் நிறுவனத்தில் செயல்பாடுகளை புகார் நகலுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

13. 10.02.2017ம் தேதி எதிரி மற்றும் 2 நபர்களுடன் நிறுவனத்திற்கு வந்தார் என்று சொல்லும் நிலையில் அவர் சி.சி.டி.வி. உள்ள அலுவலகத்திற்கு வந்தாரா என்றால் இல்லை. உப்பளத்திற்கு தான் வந்தார். அதை சுற்றிலும் காம்பவுண் சுவர் எழுப்பப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

14. பொதுவாக உப்பளத்தில் தண்ணீர் இல்லாத காலத்தில் ஆடு, மாடு மேய்ப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் என்று அனைவரும் வந்து செல்லும் இடம் தான் என்றால் சரிதான். 10.02.2017 அன்று ஏற்பட்டதாக சொல்லப்படும் சம்பவத்திற்கு காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். என்றைய தினம் கொடுத்தேன் என்றால் 13.02.2017 அன்று கொடுத்தேன்.

15. உண்மையிலேயே நான் சொல்வது போல் 10.02.2017 அன்று சம்பவம் நடந்திருந்தால் அன்றைய தினமே நான் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் 3 நாட்கள் தாமதமாக புகார் கொடுத்திருக்கமாட்டேன் என்றால் 11.02.2017 அன்று முதலில் ஒப்பந்ததாரர்கள் கொடுத்தார்கள், அதன்பின்னர் 13.02.2017ம் தேதி புகார் கொடுத்தேன்.

16. சம்பவத்தின் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் நான் சம்பவத்தை கேள்விபட்டு தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில்நான் இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர் அன்றைய தினம் பதிவு செய்த பதிவுகள் 22.03.2017 அன்று நியூஸ் 18 சேனலில் ஒளிபரப்பானது.

17. ம.சா.ஆ.1ல் விடுநர் என்ற பகுதியில் பெயர் மற்றும்முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அனைத்து ஒப்பந்ததாரர்களின் கையொப்பங்கள் கீழே இடப்பட்டுள்ளது. புகார் கொடுக்கப்பட்டது உண்மை என்றால் புகார் ஏற்பு ரசீது கொடுக்கப்பட்டிருக்கும் என்றாலும் அவ்வாறு எதுவும் புகார் ஏற்பு மனு இணைக்கப்படாததால் ம.சா.ஆ.1 இவ்வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 நிலைக்கதக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

18. புகாரில் கையொப்பங்கள் செய்துள்ள ஒப்பந்ததாரர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இரண்டு நபர்களான முத்துலிங்கம் மற்றும் மகேஸ்வரன் ஆகியோர்களை சேர்த்துள்ளேன்.

19. ம.சா.ஆ.2 13.02.2017 அன்று நான் கொடுத்த புகாருக்கு போலிசார் நடவடிக்கை எடுத்தாரா என்றால் இருதரப்பையும் போலிசார் அழைத்து எதிரியிடமிருந்து மன்னிப்பு கடிதம்

ஒன்றை வாங்கினார்கள். இந்த வழக்கில் அன்றைய தினத்தில் நாங்கள் சமாதானமாக எங்கள் தரப்பில் சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல.

20. உண்மையிலேயே நான் சொல்வது போல் சமாதானம் ஆகவில்லை என்றால் இவ்வழக்கில் போலிசார் நாங்கள் கொடுத்ததாக சொல்லப்படும் புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

21. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அதனால் தான் போலிசார் வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

22. நீண்டகாலமாக எனக்கும், உமாநாத்துக்கும் பிரச்சனை இருப்பதாக சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு உண்மையிலேயே பிரச்சனை இருந்திருந்தால் அவர் மீது புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் அல்லது தனிநபர் புகாராவது தாக்கல் செய்திருப்பேன் என்றால் அதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

23. 10.02.2017 அன்று சம்பவம் நடந்ததாக தான் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் செய்தி எதுவும் தொலைகாட்சியில் ஒளிபரப்பபட்டதாக புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்ததிலிருந்து ஒரு மாதம் கழித்து தான் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பானது.

24. ம.சா.ஆ.3 15.03.2017 தேதியிட்ட சமாதானம் கடிதம் ஒன்றை நான் தாக்கல் செய்துள்ள நிலையில் நாங்கள் சமாதானம் செய்து கொள்ளாத நிலையில் இவ்வாறான ஆவணம் எப்படி எங்களுக்கு கிடைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை.

25. ம.சா.ஆ.3 ஆவணம் கையால் எழுதப்பட்ட ஒரு நகல் என்றாலும் அதன் உண்மை தன்மை அறிய அதன் அசலை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

26. ம.சா.ஆ.4 அவணம் நோட்டிஸ் ஒன்று தாக்கல் செய்துள்ளேன், அந்த நோட்டிஸ் எனக்கு எங்கு எப்படி கிடைத்தது என்று எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி நினைவில்லை. ம.சா.ஆ.4 ஆவணத்தை

பொதுவாக கணினி தட்டச்சு செய்ய தெரிந்தவர்கள் சாதாரணமாக தயார் செய்யலாம் என்றால் சரியல்ல.

27. ம.சா.ஆ.4 ஆவணம் அச்சடிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டதாக மகேஸ்வரி ஆப்செட் அச்சகம், ஜெராக்ஸ் சூணாம்பேடு என்ற நிறுவனத்திற்கு விளக்கம் கேட்டு கடிதம் எதாவது அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. மேலும் அந்த அச்சகத்திற்கு நேரிடையாக விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பினேனா என்றால் இல்லை.

28. எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றசாட்டிற்கு வலு சேர்க்கும் விதமாக மசா.ஆ.4ஐ நானே தயார் செய்து ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் எதிரி எங்கள் மீத பொது நல வழக்கு தாக்கல் செய்து அதற்கு அபராதம் கட்டியுள்ளதாக நான் குறிப்பிட்டுள்ள நிலையில் எதிரி அபராதம் கட்டியதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

29. ம.சா.ஆ.5ல் குறிப்பிட்டுள்ள வழக்கிற்கு எதிராக எதிரி அப்போதே மேல்முறையீடு செய்துவிட்டார் என்றால் சரியல்ல. 2008ம் ஆண்டே அந்த வழக்கு குறித்த விவரங்கள் எனக்கு நன்கு தெரிந்தும் இந்த வழக்கிற்காக அதை பயன்படுத்த முடியாது என்றால் சரியல்ல.

30. 2008ம் வருடத்தின் நடந்த வழக்கின் தீர்ப்புக்கு பிறகு எதிரிக்கு எதிராக வழக்கு எதாவது தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. தற்போது வழக்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளோம்.

31. ம.சா.ஆ.6, காஞ்சிபுரம் காவல் துறை கண்காணிப்பாளருக்கு கொடுத்ததாக சொல்லப்படும் புகாரின் நகலை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரை நான் நேரிடையாக சென்று கொடுத்தேனா அல்லது தபால் மூலமாக அனுப்பினேனா என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை. புகாரை நேரில் கொடுத்திருந்தால் அதற்கு ஒப்புகை ரசீது கொடுக்கப்பட்டிருக்கும் என்றாலும் அல்லது பதிவு தபாலில் அனுப்பபட்டிருந்தால் அதற்கு ஒப்புகை அட்டை கிடைக்கப்பட்டிருக்கும் என்றால் அது பற்றி நினைவில்லை.

32. ம.சா.ஆ.6 புகாரை எதற்காக கொடுத்தேன் என்று இவ்வழக்கின் புகாரிலோ, அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.6ல்

குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் இல்லை.

33. ம.சா.ஆ-6 இவ்வழக்கை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அனுப்பபட்டதாக சொல்லப்படும் அறிவிப்பு எதிரிக்கு கிடைக்கப்பெற்றதை உறுதி செய்ய ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை.

34. எதிரிக்கு ம.சா.ஆ.7 கிடைக்கப்பெறவில்லை என்றாலும் அவ்வாறான நிலையில் இவ்வழக்கு எதிரியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது போல் நானாகவே ஒரு அறிவிப்பை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

35. எதிரியால் எந்தவிதமான அறிவிப்பும் பெறப்படாதபோது எதிரிக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 ஆவணம் புகைப்படம் மற்றும் குறுந்தகடு ஆகியவை நான் வழக்கு தாக்கல் செய்தபோது என் வசம் இருந்ததா என்றால் இருந்தது.

36. அவ்வாறு ம.சா.ஆ.8 வழக்கு தாக்கல் செய்திருந்தபோது எனது வசம் இருந்ததாக சொல்லப்படும் நிலையில் அது குறித்து இந்த வழக்கின் மனுவில் நான் ஏன் குறிப்பிடவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்தபோது கொடுக்கலாம் என்று வைத்திருந்தேன்.

37. உண்மையிலேயே அப்போதே என் வசம் ம.சா.ஆ.8 ஆவணம் இருந்திருந்தால் மற்ற ஆவணங்கள் தாக்கல் செய்திருந்தபோது அதையும் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு தாக்கல் செய்யாததால் வழக்கிற்காக மசா.ஆ.8 தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

38. ம.சா.ஆ.8ல் உள்ள விவரங்கள் யாரால் எங்கு வைத்து எடுக்கப்பட்டது என்பதை எனது மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் நியூஸ் 18 சேனலிலிருந்து ரிப்போர்ட்டர் அழைத்து வரப்பட்டார் அவருடன் வந்த வீடியோ கிராபரால் பதிவு செய்யப்பட்டது என்பதை எனது மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ

சொல்லியுள்ளேனா என்றால் நியூஸ் 18 சேனலில் ஒளிப்பரப்பானது என்பதை மட்டும் சொல்லியிருப்பேன்.

39. 13.02.2017 அன்று காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரில் எதிரியுடன் நியூஸ் 18 சேனலிருந்து நபர்கள் வந்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் போட்டோ கிராபர் வந்த விவரத்தை மட்டும் சொல்லியிருப்பேன். ஒருமாதம் கழித்து தான் நியூஸ் 18 சேனலில் ஒளிப்பரப்பானது.

40. இந்த விவரம் சம்பந்தமாக நியூஸ் 18 சேனலுக்கு விவரம் கேட்டு நோட்டிஸ் எதாவது அனுப்பினேனா என்றால் இல்லை. தவறாக செய்தி வெளியிட்டதாக நியூஸ் 18 சேனலை இவ்வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

41. மேலும் நியூஸ் 18 சேனலை சேர்ந்தவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. நியூஸ் 18 சேனலில் வழங்கப்படும் பதிவுகளையும், நான் தாக்கல் செய்துள்ள பதிவுகளையும் ஒப்பிட்டு பார்த்தால் தான் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்றால் ஒளிப்பரப்பு செய்யப்பட்ட விவரத்தின் பதிவுகளை தான் நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன்.

42. மசா.ஆ.8 ல் தாக்கல் செய்துள்ள புகைப்படம் மற்றும் குறுந்தகடு யாரால் எங்கு வைத்து பதிவு செய்து தரப்பட்டது என்ற விவரத்தை எனது வழக்கிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியை பழிவாங்கும் நோக்கத்தில் மார்பிங் செய்த புகைப்படங்களை தான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்திய சாட்சியல் சட்டம் 65பி சான்றிதழ் நான் தாக்கல் செய்யவிலலை என்றால் சரியல்ல.

43. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையான ஆவணங்களுக்கும், ஏதிரிக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தின் நடவடிக்கை சம்பந்தமாக மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர், செய்யூர் வட்டாட்சியர், எதிரி அவருடைய பகுதியை சேர்ந்த மக்களுடன் சேர்ந்து முத்தரப்பு பேச்சு வார்த்தை எப்போதாவது நடத்தப்பட்டதா என்றால் இந்த வழக்கு சம்பந்தமாக எப்போதும் நடத்தப்படவில்லை.

44. துணை இயக்குநர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், விழுப்புரம் அலுவலகத்தில் எங்கள் நிறுவனத்தின் செயல்பட்டால் அதை சுற்றியுள்ள கிராம பொதுமக்களுக்கும், பணி செய்யும் பணியாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

45. நாங்கள் எங்களது மற்றொரு நிறுவனமான கந்தாடுலிருந்து சூணாம்பேட்டிற்கு கழிவுகளை எடுத்து வந்து நிரப்புவதால் சுற்று சூழல் மாசு ஏற்பட்டு நீர்வளம் கெடுவதாக 2005 முதல் இன்றைய தினம் வரை சூணாம்பேடு கிராம பஞ்சாயத்து தனித்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன்பேரில் கிராம மக்கள் போராட்டம் செய்தார்கள் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

46. எதிரி எங்கள் நிறுவனத்தில் ஒப்பந்ததாரராக பணி செய்த காலத்தில் சரிவர ஊதியம் கொடுக்காததாலும் அதை எதிரி கேட்டதால் தற்போது எதிரி மீது தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எங்கள் நிறுவனத்திற்கு எதிராக எந்த அவதூறு செய்தியும் பரப்பவில்லை என்றாலும் எங்கள் நிறுவனத்திற்கு எதிராக சூணாம்பேடு கிராம முதல் நிலை ஊராட்சி மன்றத்தால் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டு எங்கள் நிறுவனத்திற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முன்வைத்து தான் மக்கள் போராட்டம் செய்தார்கள் என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

47. தொழிலாளர்கள் நலனுக்காக தொடர்ந்து எதிரி சட்ட போராட்டங்களை நடத்தி வருவதால் அதை ஒடுக்கும் விதமாக எதிரிக்கு எதிராக நான் தனிப்பட்ட புகாரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)

மறுவிசாரணை..இல்லை.

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-N.Preethi
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.